மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : OS 123/2022

பெயர் : முத்துமாரியப்பன் (PW1)

த/பெ. : மாடசாமி

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26thday of July 2022

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) சித்திரைவேலின் அப்பா பெயர் கருப்பணன் என்ற கருப்பசாமி. சித்திரைவேலின் முதல் மனைவி பெயர் கிரேஸ். சித்திரைவேலின் 2 வது மனைவி பெயர் அழகம்மாள். சித்திரைவேலுக்கும் கிரேஸ்க்கும் பிறந்த குழந்தைகள் தான் சத்தியசீலன் மற்றும் வையலெட்பிலோமீனா.

2) சத்தியசீலனின் மனைவி திரேஸம்மாள் என்றாலும் அவர்கள் பிள்ளைகள் பெயர் கிரேஸ், ஜெயராணி, சித்ரா.வையலெட் பிலோமினா முதலில்வெள்ளைச்சாமி என்பவரை திருமணம் செய்துள்ளார். வையலெட்பிலோமீனா மற்றும் வெள்ளைச்சாமிக்கு பிறந்தவர் தான் 2ம் வாதி கிரேஸ் மேரி.

3) வையலெட்பிலோமீனாவிற்கும் வெள்ளைச்சாமிக்கு நீதிமன்றம் மூலம் விவாகரத்து பெறப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் ஜாதியின் வழக்கப்படி விவாகரத்து செய்யப்பட்டது. ஜாதி வழக்கப்படி விவகரத்து செய்யப்படவில்லை என்றாலும் விவாகரத்து கொடுக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு தான் உண்டு என்றால் சரியல்ல.

4) வையலெட்பிலோமீனா முதல் திருமணம் சட்டப்படி நிலுவையில் இருக்கும் போதுதான் என்னுடன் சட்ட முறனாக வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. எனக்கும் வையலெட்பிலோமீனாவுக்கும் சட்ட முறனாக பிறந்தவர்கள்தான் ஆனந்தராஜ் ம ற்றும் உதயகுமார் என்றால் சரியல்ல.

5)நானும் 3 மற்றும் 4 வது வாதிகளும் வையலெட்பிலோமீனாவின் சட்ட பூர்வ வாரிசுகள் கிடையாது என்றால் சரியல்ல. வையலெட்பிலோமீனாவிற்கு வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் என் கைவசம் வாரிசு சான்றிதழ் உள்ளது. நான் வையலெட்பிலோமீனாவின் வாரிசு கிடையாது என்பதாலும் 3 மற்றும் 4 வாதிகள் முறை தவிரி பிறந்தவர்கள் என்பதால் சித்திரைவேலின் சொத்தில் எங்களுக்கு பாகம் கிடையாது என்றால் சரியல்ல.

6) வெள்ளைச்சாமி உயிருடன்தான் இருக்கிறார். அவர் வேறு திருமணம் செய்துகொண்டார். வெள்ளைசாமி வேறு திருமணம் செய்து கொண்டதை நான் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். வெள்ளைச்சாமி இந்த வழக்கில் அவசிய தரப்பினர் என்றாலும் அவரை கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

7) என்னிடம் காட்டப்படும் வா.சா. ஆ 6 அடைமான ஆவணத்தில் சித்திரைவேலின் தகப்பனார் பெயர் கருப்பசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சித்திரைவேல் மற்றும் சத்தியசீலனின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1 வது சொத்திற்கு மேற்கே வையலெட்பிலோமீனா வீடு கட்டியதாக சொல்லியுள்ளதற்கு நான் நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

8) எனக்கு சித்திரைவேலின் அப்பா பெயரே தெரியவில்லை என்றாலும் நான் சொத்தினை கூட்டு அனுபவம் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1 வது தபசில் சொத்திற்கு மேற்கே என் சகோதரி முனியம்மாள் தான் வீடு கட்டியுள்ளார் என்றால் இல்லை, அதை தட்டி கேட்டதால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் இல்லை.

9) தபசில் சொத்து சித்திரைவேலின் வாரிசுகளான 5 ம் பிரதிவாதி மற்றும் அவரது உடன் பிறந்தவர்களின் அனுபவத்தில் உள்ளது என்றால் அழகம்மாள் உயிருடன் இருந்தவரை அவரது அனுபவத்தில் இருந்தது தற்போதுதான் 5 முதல் 8 பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது. வையலெட்பிலோமீனாவிற்கு 1984 விற்கு முன்பாக திருமணம் முடிந்துவிட்டது என்றாலும் சித்திரைவேல் 2005 வருடத்திற்கு முன்பாக இறந்துவிட்டதாலும் வையலெட்பிலோமீனாவிற்கே சொத்தில் உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

10) சித்திரைவேல் 1986 ல் இறந்துவிட்டார் என்றால் 1988 என்று நினைக்கின்றேன் . என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் கூட்டு அனுபவத்தில் இல்லாததால் நான் நீதிமன்ற கட்டணம் செலுத்தியிருக்கும் பிரிவு தவறு என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.